# ஆனந்த மழையில்

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்
ஆயிரம் நிலவொளியோ
எனை ஆண்டிடும் இறையரசோ
அவனியை மாற்றிடும் அருட்கடலோ

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்

மன்னவனே என் இதயம் பொன்னடி பதிக்கின்றான் } 2
விண்ணகமே என் இதயம் அன்புடன் அழைக்கின்றான்
இனி என் வாழ்விலே ஒரு பொன்னாளிதே
பண்பாடவோ என்றும் கொண்டாவோ
மலர்கின்ற புதுவாழ்விலே இனி சுகமான புதுராகமே 2
என்றென்றும் உண்டாகும் பேரின்பமே..
பேரின்பமே.. பேரின்பமே..

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்
ஆயிரம் நிலவொளியோ
எனை ஆண்டிடும் இறையரசோ
அவனியை மாற்றிடும் அருட்கடலோ

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்

சேற்றினிலே தாமரையாய் தேர்ந்தென்னை எடுத்தானோ } 2
காற்றிலே நறுமணமாய் கலந்தென்னில் நிறைந்தானோ
என்னில் ஒன்றாகினாய் நான் நன்றாகினேன்
பணிவாழ்வுக்காய் என்னைப் பரிசாக்கினாய்
மலர்கின்ற புதுவாழ்விலே இனி சுகமான புதுராகமே 2
என்றென்றும் உண்டாகும் பேரின்பமே
பேரின்பமே.. பேரின்பமே..

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்
ஆயிரம் நிலவொளியோ
எனை ஆண்டிடும் இறையரசோ
அவனியை மாற்றிடும் அருட்கடலோ

ஆனந்த மழையில் நானிலம் மகிழ
மன்னவன் எழுகின்றான்